மக்கள் சபைமுன் 5000 தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

The "Nam Nadu" : A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா இலங்கையில் 10 சதம்

சென்னை: புரட்டாசி 11உ திங்கள் (27—9—54) வெளியூர்: புரட்டாசி 12உ செவ்வாய் (28—9—54)

மலர்: 2 இதழ்: 90

'கோரிக்கைகளை ஏற்க மறுத்தால் உருளைகள் நொறுக்கப்படும்'

புதுடில்லி தெருக்களில் இரவில்லே தொழிலாளர்கள் ஒரு மைல் ஊர்வலம்

துணைக்கண்டம் முழுவதிலிருந்தும் தொழிலாளர்கள் பங்கு கொண்டனர்

புதுடில்லி, செப். 25—

ஏறத்தாழ 5000 இரயில்வே இலாகா தொழிலாளர்கள், இன்று, மக்கள் சபைமுன் கூடி, தங்களுடைய சம்பள விகிதத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

"எங்கள் கோரிக்கைகளை ஒப்புக் கொள்ளுங்கள்; இல்லையானால் உருளைகள் நொறுக்கப்படும்" என எக்காளமிட்டனர்.

மக்கள் சபையை இரவில்லே கண்ட வேண்டிய கடமையை இலாகா தொழிலாளர்கள் முற்றுகையிடுமுன், புதுடில்லியிலுள்ள முக்கியதெருக்களின் வழியே ஒரு மைல் தூரமுள்ள ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னிருந்து நடத்தியது அகில இந்திய ரெயில்வே இலாகா ஊழியர்கள் சங்கமாகும். கோரிக்கைகளை அடைவதற்காக மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு, அச்சங்கத்தின் செயற்குழு கூட்டம் டில்லியில் கூடி இருக்கிறது. மேற்படி பெரிய சங்கத்தை சர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும், சம்மன சமிதின் சொல்படி ரெயில்வே இலாகா ஊழியர்கள் சம்மளத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்றும், அச்சங்கம் கோரிக்கை வெளியிட்டிருக்கிறது.

இலங்கை இந்தியர்களின் கருத்தை அறியாதவரை நெருக்கடி நீங்காது!

டில்லி ஒப்பந்தம் செத்துவிட்ட பிணம்

உயிருட்ட முனைவது ஆபத்தானது!

இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர் எச்சரிக்கை

"இலங்கையில் வதியும் இந்தியருக்குக் குடியுரிமை தருவது பற்றிய நேரு-கோத்தலாவலை ஒப்பந்தம் ஏற்கெனவே செத்து விட்ட ஒன்று; அதற்கு மீண்டும் புத்துயிரளிக்க முற்படுவது பேராபத்துக்களையே விளைவிப்பதாகும்."

என்று இலங்கை இந்தியக் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் கொழும்பில் நேற்றைய செய்தியாளர் மாநாடொன்றில் குறிப்பிட்டார்.

"கடந்த ஜனவரியில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரு பிரச்னைகளைக் குறித்தமான நிலையில் விட்டிருக்கிறது. அதன் பேரில் இலங்கை சர்க்கார் இந்த இரு பிரச்னைகளுக்கும் சாதகமான ஒரே தீர்வை முன்வைத்து வருகிறது. இதை ஏற்கச் சொல்ல இந்திய அரசாங்கம் மறுத்ததாலேயே மீண்டும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே, வருகிற அக்டோபரில், இந்திய-இலங்கைப் பிரதமர்கள் டில்லியில் சந்திப்பில் நேரடியாகத் தீர்த்துக் கொள்ளத் தீர்மானித்துள்ள சந்தர்ப்பத்தை, இலங்கை இந்தியர் அமைப்புகளின் அடையாளத்தை ஓரளவேனும் உறுதி செய்வதில், இரண்டு பிரதமர்களும் மனம் வைத்திக்கொள்ள வேண்டும்," என்றும் தொழிற் தொண்டமான் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியதாவது:—

"கடந்த ஜனவரியில் இருநாட்டுப் பிரதமர்களும் சந்தித்துப் பேசுகையில் இலங்கை இந்திய காங்கிரஸின் பிரதிநிதிகளை தங்களுடன் இலாத போனதற்கு முக்கியமான காரணம், அதை யார் தெரிவு செய்வது என்பதுதான்.

இலங்கை இந்தியரின் கருத்தை அறியப்பட்டிருந்தால் ஒப்பந்தத்தில் ஏற்பட்ட குறைகளைத் தவிர்த்திருக்கலாம்.

சுதந்திரமும், சமவெண்ணமும், சமரச மனப்பான்மையும் இருப்பின் இலங்கை இந்தியருக்குக் குடியுரிமை தரும்பிரச்னை எளிதில் தீரும். ஆகவே, இலங்கை இந்தியரின் உண்மையான பிரதிநிதிகள் இல்லாமலேயே, இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முயலுவதை விவேகமற்ற, கடமுறைக்கு ஒவ்வாத செயலாகும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

★

கொழும்பு, செப் 25—"இந்தியப் பிரதமர் மன்னிக்க நேருவுடன் கேள்வார்த்தை கள் நடத்தச் சென்றும் கொத்தலாவலை, தாம், அதற்குச் சென்றதை ஒரு அரசியல் கீழ்ளின் மனோநிலையுடன் சென்ற

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 27—9—54 திங்கள்

வழி பிறக்குமா?

ஆகஸ்டுத் திங்கள் அமெரிக்கத் திங் இலங்கைப் பிரதமர் ஜான் கொத்தலாவலை, கொழும்புக்கு வந்த, பிரதமர் நேருவைச் சந்திக்க இருக்கிறார். கொத்தலாவலை மட்டுமே தனித்து வருவதாக இல்லை. மதுக்கம் சோல், கொழும்புள்ள இலங்கை அரசியல் தலைவர்களில் சிலரையும் கூட்டிக் கொண்டுதான் இருக்கிறார்.

இலங்கைப் பிரதமரை தலைவராகக் கொண்டு வரவிருக்கும் தூதுக் குழுவிற்கு, இந்தியக் குடியரசு தலைவரின் கனிவான உபசாரமும், விருந்தும், இந்தியப் பிரதமரின் முகம் மலர்ந்த வரவேற்பும் அமர்க்களமாக கொழும்பு மாகரில் இருக்கு மென்பதில் ஐயமில்லை. இந்தியப் பிரதமருடன் உரையாடி விட்டு, வந்தத் தூதுக்குழு திரும்பிச் செல்லுகிறவரை, பத்திரிகைகளுக்குச் செய்திக்கும் வஞ்சமிருக்காது. வெளியிடப் பெறும் விதவிதமான புகைப்படங்களுக்கும் குறைவிருக்காது!

மக்கள் பெயர் கூறி முடியாத இந்த இருமண்டல பிரதிநிதிகளும் கடந்தவிருக்கும் கூத்தும் கேளிக்கையும், கடல் கடந்துச் சென்று சிங்களத்தில் 'நாடற்ற நாடோடி' களாகக் கண்களைப் பிசைந்து கொண்டு தவித்துக் கிடக்கும் இந்தியத் தமிழ் மாபினருக்கு, ஆறுதல் அளிக்குமோ, ஏற்கெனவே கொடுத்த துன்பத் தொந்தத் துடைக்குமோ, கடுகத்தனையும் நன்மை செய்யுமோ என்பதை நினைக்கவே முடியாது. உபசார மோகர் பின் மிகைப்பகுதியைக் குறைத்து, இரண்டு பிரதமர்களும் மனமான நெஞ்சம் விட்டு, பிரச்சினையில் உடனடியாக நல்ல முடிவு காண, விவேகத்தைத் துணைகொள்ள வேண்டும்.

ஏற்கனவே சென்ற ஆண்டு செய்து கொண்ட டெல்லி உடன்பாடு போன்று, இப்பொழுதும் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளுதில், இந்தச் சந்திப்பும் முடிவுறுமானால், அதனால் இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களின் தன்மானம் இனி நீங்கிவிடும் என்று நம்பிக்கைக் கொள்வதற்கு இடமேற்பட்டு விடாது. முன்னர் செய்துகொண்ட உடன்படிக்கை, அயர்கன் இன்னமே கனைக் களைய எவ்வாறு ஒரு தனியும் உதவாமல் போய் விட்டதோ, அதே போன்றதான் புதிய உடன்பாடும் போன்றியில் முடிவுறும்.

சென்றமுறை இந்தியப் பிரதமர் செய்தத் தவறை, இந்தச் சந்திப்பிலாவது கண்டிப்பாகச் செய்யாமல் இருக்க வேண்டும். அதாவது, இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் எதிர்காலத்தையும், கைதையும் குறித்து இலங்கைச் சர்க்காருக்கு இதுக்கு மனவு அக்கறை, இந்திய சர்க்காருக்கு இருக்கவில்லை—இருக்க முடியாது என்ற உண்மையை, இது வரை சென்னை சட்ட சபையின் கலைவெற்ற விவாதமும், பிறமேலிய தீர்மானமும் சுட்டிக் காட்டின்றன. சென்னை சர்க்கார் விழித்துக் கொண்ட பிறகுதான், இந்தியப் பிரதமரும், இலங்கை இந்தியத் தமிழர்கள் பிரச்சினையின் முடிவு காண்பதற்கு, சென்னை சர்க்காரையும் கலந்தாகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்.

அம்முடிவின்படி, இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் அலுவலகத்தைச் பணிபுரிபவரும், சென்னை முதல்வர் அமைச்சரை நேரில் கண்டு கருத்தறிந்துச் சென்றார்.

இலங்கை சென்னைத் திர்ப்பதற்கு சென்னை சர்க்காரின் ஆலோசனை எந்த அளவு தூண செய்திருக்கிறது அந்த ஆலோசனையின்படி கடந்த எந்த அளவு இந்தியப் பிரதமர் முன்னேறினார். என்பனவெல்லாம் இன்னமும் மூடி மந்திரமாகத்தான் இருந்து வின்றன. குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் நேருவைச் தொடர்புகொள்ள ஒரு மாபில சர்க்காரையும் கலந்து செய்ய வேண்டும் என்ற ஒருங்குணமும், மக்களாட்சியை பண்பும் இந்தியப் பிரதமருக்கு ஏற்பட்டவரையில், இச்சுழ் நிலையில் நிராவிடர்கள் திருந்தி கொள்ள வேண்டியதுதான்.

எனவே, கைமேல் இருந்து பெற சந்திப்பின் பொழுதும், சென்னை சர்க்கார் பிரதிநிதியையும் உடன் வைத்துக் கொண்டு, நேரு பண்டிதர், இலங்கை தூதுக் குழுவுடன் உரையாடவேண்டும். இந்தியப் பிரதமரை சந்திக்க வருகிற ஜான் கொத்தலாவலை, எதிர்க்கேள்வி தவிர்க்கையும் கூடவே கொண்டி வர இருக்கிறார்; அதை ஒரு முன் மாதிரியாகக் கொண்டு நமது கலைமுறையை உருவாக்கிக் கொள்வதாக இருக்கட்டும், தென்னாப்பிரிக்க உள்ள சர்வோதய பெரியார் ஒருவர் மாறுபட்ட மற்றக் கட்சித் தலைவர்களையும், கலைவெற்ற திருக்கிற சந்திப்பில் பங்கு கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும், இந்தியப் பிரதமர். ஆனால், ஆசிய ஜோதியிடம், இந்த அற்பசொற்பமான செயலை எதிர்பார்க்க முடியாது என்பதை நாம் அறிவோம்!

நமது நி.மு. கழகம் கோடியக்கரை சட்டசபையில் இடம் பெற்றிருக்கவில்லை யானாலும், நாட்டு மக்களிடம் அதற்குள்ள பிடி கணிசமானது என்பதை, கேரு கண்டிதர் அறிந்த கொள்ள முடியாமல் இல்லை. அதனால் இந்தியப் பிரதமரை சந்திக்க வருகிற ஜான் கொத்தலாவலை, கொழும்பு மாநிலத்தில் கூட்டுக்

கழகச் செய்திகள்

சென்னை-கோடம்பாக்கம் தி. மு. கழகம்

19-9-54 காலை 10½ மணிக்கு, தோழர் ப இராமசாமி தலைமையில், நடைபெற்ற கழகப் பொதுஉறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கணேசன்; துணைச்செயலாளர்: இளங்கோ; பொருளாளர்: இறையரசு; மாவட்ட உறுப்பினர்கள்: இளமுருகுசுந்தரம், கலியமூர்த்தி; நிர்வாக உறுப்பினர்கள்: அருட்செல்வன், ஞானசேகரன், சத்தர், திருட்டிணமூர்த்தி, அரங்கநாதன், துணைக்கண்ணு, வடிவேலன், கடாசலம்.

சோலமலை — மூணர் தி. மு. கழகம்

17—9—54ல், அமைச்சர் மன்றத்தில், தோழர் கலப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்ற 'திராவிட நாடு பிரிவினை' விளக்கக் கூட்டத்தில், தோழர்கள் சே. இராமலிங்கம் ஆசிரியரும், ஞானசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றியபின் தி. கோ. சக்கரனின் அம்மாகிய பிரமோகத்தில் உயிர் நீத்த தோழர்களுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பெங்களூர்-அக்கிலேட்டை தி. மு. கழகம்

19—9—54ல், நமது நிர்வாகக் குழுவினர் தேர்தல், தோழர் வே. இளஞ்சேரன் தலைமையில் நடைபெற்றபோது, பின்வரும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: வி. கோபாலசேன்; துணைச் செயலாளர்: பி. உலகநாதன்; பொருளாளர்: எல். வி. மதி; மாவட்டப் பிரதிநிதிகள்: கம். சு. பெருமான், ஜி. திருட்டிணன். செயற்குழு வினர்கள்: வே. இளஞ்சேரன், டி. ஏ. துரைசாமி, பி. என். சாமி, மு. கோ. கோதண்டன், இ. இராமச்சந்திரன், பி. பி. அரங்கநாதன், எம். செபராம், மா. இராமசாமி, ஏ. முருகேசன், கே. ஆதிமூகம். பின்னர், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பெங்களூர் — சோமபுரம் தி. மு. கழகம்

19—9—54 காலை 10 மணிக்கு தோழர் வி. முத்து தலைமையில் நடைபெற்ற இவ்வூர் தி. மு. கழக துவக்க விழா கிளை நாள் கூட்டத்தில், தோழர்கள் சு. கண்ணன், வ. இளங்குமணன், சே விழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பெங்களூர்-பெரியார் நகர் தி. மு. கழகம்

17—9—54 மாலை 6½ மணிக்கு கழகச் சார்பில் தோழர் பு. க. பெருமாள் தலைமையில் திராவிட நாடு பிரிவினை நாள் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ரா. கனகராசன், மு கி வேணு திராவிடம் பிரிய வேண்டியதின் அவசியம் பற்றி சொற்பொழிவாற்றினர்.

பழனிநகர் தி. மு. கழகம்

19—9—54 காலை 9 மணிக்கு பழனியில், திராவிட நாடு பிரிவினை நாள் விழா கொண்டாடப்பட்டது. தோடி மைதானத்தில், தோழர் பெரியசாமி கழகக் கொடியை ஏற்றி வைத்தார்; பின்னர், 104 சுவர்களில் கொண்டு வரப்பட்டு, சுமார் 18 மைல் சுற்றளவுள்ள கிராமங்களுக்குச் சென்ற பின்னர், பழனிநகர் முழுவதும் வந்த பின்னர், மாலை 3 மணியளவில் ஊர்வலம் முடிவுற்றது.

திருவனந்தபுரம் தி. மு. கழகம்

13—8—54ல் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில், புதிய செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: வி. பி. சென்னம்; துணைச் செயலாளர்: கே. ஏ. எம். சுபேர்; பொருளாளர்: கே. சுப்பாயலு; எல்லைப்புற பிரதிநிதிகள்: ஏ. கிருஷ்ணன்; செயற்குழு உறுப்பினர்கள்: பி. சங்கர், எம். உமாநாதன், ஏ. எல். மணி, ஏ. மாதவ, டி. சுவாமிநாதன், துர். சண்முக, எம் ஏ. கிருஷ்ணன், எம். மருத்.

பெண்ணலை — மேலகற்கண்டார் கோட்டை (இளை) தி. மு. கழகம்

17—9—54 மாலை 6-30 மணியளவில் கழக கட்டிடத்தில், திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாட்டம் தோழர் எல். திருஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. சுந்தரம் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர்கள் எஸ். முத்தகிருஷ்ணன், மு. மாணிக்கம, எஸ். அமிர்தசன், ஜி. மாரிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இதனிடையே தொண்டர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மேல்பட்டாம்பாக்கம் தி. மு. கழகம்

17—9—54-ல், தி. மு. கழக சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வூர் மக்கள் வெளியில் கொடியேற்றப்பட்டு, இனிப்பு வழங்கப்பட்டது.

கல்லுக்குழி (இளை) தி. மு. கழகம்

16—9—54ல், நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் செயலாளர் ஜி. மாணிக்கம் உடல் நலக் குறைவின் காரணத்தால் விலக்கப்பட்டு அதற்குப் பதிலாக தோழர் வரதராசன் நியமிக்கப்பட்டார். அக்கூட்டம் இதனில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவ தென முடிவு செய்யப்பட்டது.

திருவிச்சிலிப்புத்தூர் தி. மு. கழகம்

17—9—54ல் கழகச் சார்பில், தோழர் மா. குருசாமி தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகக் கிளை நாள் கொண்டாட்டத்தில் தோழர்கள் க. அண்ணாமலை, எம். எஸ். இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கும்மிடிபூண்டி தி. மு. க.

19—9—54 மாலை தோழர் ப. செ. அப்பாவு தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில், கும்மிடிபூண்டி பகுதியில், செங்கற்பட்டு மாவட்டத் தேர்தலில் உழைப்பட்டி அகருக்கும் பதிலாக தோழர் வரதராசன் நியமிக்கப் பட்டார். அக்கூட்டம் இதனில் ஒரு பொதுக்கூட்டம் கடத்துவ தென முடிவு செய்யப்பட்டது.

வத்தலகுண்டு தி. மு. க.

22—9—54 இரவு 9 மணிக்கு தோழர் சண். பிச்சை தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், வத்தல குண்டு சுற்றுப் பிராமங்களில் தி. மு. கழக கிளைகள் அமைக்கும் ஏற்பாடுகள் பற்றி, பொதுக் கூட்டத்தன்று கலந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது.

தொட்டகும்பு (குந்தை) தி. மு. க. பொதுக்கூட்டம்

19—9—54 மாலை 1 மணியளவில் தோழர் கே. மாதன் தலைமையில் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள், வி. இரு. சுந்தரேசனார், வி. ரா ஒளிமுகன் வி. சண்முகராதன், எச். மாதன், ரா. கருணிதி ஆகியோர் தி மு கழகத்தின் இலட்சியங்கள் பற்றி சொற்பொழிவாற்றினர். அன்று இரவு 7 மணிக்கு நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். செயலாளர்: ஜே. நாடன்; துணைச் செயலாளர்: கே. வேம்பன்; பொருளாளர்: ரா. லிங்கன். நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: தோழர்கள் எச். மாதன், ஜே. சுந்தரலிங்கன், கே. கே. வெள்ளி, மா. சஞ்சீவன், எம். பிள்ளை, எல். பீமன், ஐ. சஞ்சன, ஏ. எல். மாதன், க. அர்ச்சுனன், ஆ. ஜோகராஜ், எம். கே. சஞ்சன், எல். மாதன்.

வீரசோழபுரத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

21—9—54, மாலை 5 மணிக்கு கழகச் சார்பில் தோழர் தங்கராசு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் சி. அரங்கநாதன், சு. இளங்கோ, தருமு, எல். :வி. கடாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மழைமையின் பிடியிலிருந்த திராவிடச் சமுதாயம் விடுபட வேண்டுமென்றும், திராவிடம் பிரிய வேண்டியதின் அவசியம் பற்றியும், அதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு பற்றியும், தமது சொற்பொழிவில் எல். வி. கடாசலம் அவர்கள் குறிப்பிட்டார்.

மேட்டூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

20—9—54 மாலை 6-30 மணியளவில் பொதுஜனசேவா சங்கத் திடலில், தோழர் அ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் அ. மாது, க. நல்லசாமி, எல். வி. கடாசலம் ஆகியோர் கழகக் கொள்கைகள் குறித்து சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

கல்வார்பட்டியில் தி. மு. கழக பொதுக் கூட்டம்

17—9—54 இரவு 9-30 மணியளவில் தி. மு. கழகச் சார்பில், அடிவாரம் சுவேசம் தலைமையில், இவ்வூர் அருச்சுனன் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் பள்ளிச் சென்னன், கே. வெங்கடாசலன், க. அங்குச்சாமி, ஆ இராசா, எல். வீராசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் எல். மூத்த கழகக் கொடியை ஏற்றினர்.

மாயூரம் தி. மு. கழக பொதுக் கூட்டம்

5—9—54 மாலை சரியாக 6 மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் தோழர் கே. மழவிச்சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் இரா. செங்குட்டுவன் திராவிட நாடு பிரிவினையின் அவசியம் குறித்து விளக்கவுரையாற்றினர்.

குளியமுத்தூர் தி. மு. க.

19—9—54ல், கழகச் சார்பில் திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக்கூட்டம் தோழர் தங்கமணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. டி. தண்டபாணி, கோபி இராசகுமாரியோர் சொற்பொழிவாற்றினர்.

மாமண்டூரில் தி. மு. க. பொதுக் கூட்டம்

16—9—54 அன்று, தோழர் கே. மு. கோவிந்தா தலைமையில் நடைபெற்ற இவ்வூர் தி மு. கழக விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் இராம. அசோகன், முக. மீரா ஆகியோர் பேசியபின், தோழர் எல். வி. கடாசலம் சமுதாயத்திலுள்ள மூடப்பழக்க வழக்கங்களைப் பற்றியும், அரசியல் நிலைமை பற்றியும் விளக்கவுரையாற்றினர்.

* * *

செயற்குழு கூட்டம்

19—9—54ல், தோழர் துர் அசோகன் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழு கூட்டத்தில், காஞ்சி—கல்பாளையம் முகாம் மறைவுக்கும், பள்ளிபாளம் தோழர் விஸ்வநாதன் மறைவுக்கும் அனுதாபம் தெரிவித்தும், காங்கோவும் நிர்வாகக் கோர்ட் தேர்தலில் கழகம் கண்டிலையை மேற்கொள்ளுவதென்றும், தலைமைச் செயலாளர் ப. மாரிமுத்து விளக்கவுரை அளித்தும், தோழர் உ. ஏ. உடையப்பனை தலைமைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், வரவு—செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டும் முடிவுகள் செய்யப்பட்டன.

பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டம்

19—9—54 மாலை 4-30 மணியளவில் தோழர் வி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில், தோழர் வி. இளஞ்சேரன் அவர்களுடைய ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டு, தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தற்காலிகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், கர்நாடக தி. மு. கழக முதல் மாநாடு கடத்துவதென்ற தீர்மானிக்கப்பட்டு அதற்காகப் பாடுபடுவது, தோழர்கள் எல். இராசேசுவரன் வரவேற்புக் குழு தலைவராகவும், ஏ. டி. பிரான்சிஸ், செ. விழியன் செயலாளர்களாகவும், கம். துர். பெருமாள் பொருளாளராகவும், வி சோமு, பெங்களூர் சாமி விளம்பர குழுவினராகவும், இராசன் தொண்டர் படைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கரூர் வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம்

10—9—54 மாலை 6 மணிக்கு கரூர் வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் எல். கே. சாமிப்பன் இல்லில் நடைபெற்றபோது, நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கே. ஏ. முருகேசு; மாவட்டப் பிரதிநிதி: ஏ. துர். முத்துசாமி.

20—9—54 மாலை 4 மணிக்கு செயற்குழு கூட்டம் தோழர் கே. ஏ. முருகேசுர் தலைமையில் நடைபெற்றபோது சதுர் வட்டத்தில் உள்ள ஐந்து ஒன்றியங்களில், தி. மு. கழகம் அமைக்க பேச்சுவார்த்தை நடத்தி வெற்றி கண்ட தோழர்கள் அமைப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:— காலிபட்டி-ஒன்றியம்; இளங்குமரன்-குளித்தலை ஒன்றியம்; எல். கே. சாமி, டி. பி. மூர்த்தி-மாயனூர்; கம் கே. கிருஷ்ணன், துர். சந்தானபஞ்சமாதேவி, மாயனூர்; டி. பி. மூர்த்தி, டி. துர். முத்துசாமி-அரவக்குறிச்சி சுற்றுவட்டாரம்.

சின்னதாராபுரம் ஒன்றியம் அமைத்துவிட்டு, கரூர் ஒன்றியத்தில் உள்ள சில கழகங்களில் செயல் முறைகளை கேட்டு அறிந்து, அதற்கு கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்க தோழர் கே. ஏ. முருகேசுர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

தோழர் பழம்பதி மறைவு

இரங்கற் கூட்டம்

சென்ற 31-வது வட்டம் அம்மாபாளையம் தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினரும், கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற கல்லித் திட்டப் போராட்டத்தில் ஒரு பெற்ற தடியடிக் காயமடைந்து சுமார், 40 நாள் வரை மருத்துவமனையிலிருந்தவருமான தோழர் பழம்பதி அவர்கள் சில நாளாக நோய்வாய்ப்பட்டு, கடந்த 29—8—54 அன்று தனது 24-வது வயதில் இயற்கை எய்திய செய்தி குறித்து அனுதாபம் தெரிவிக்கும் வகையில், 24—9—54, மாலை 7 மணிக்கு சென்ன அம்மாபாளையம் அரசு நிடலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எல். கே. சாமி எம். ஏ., தலைமை தாங்கினர். தோழர்கள் வ. சுப்பராயலனர், முனை துர். எம். வாண்டயன், கன்னதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மறைந்த தோழருக்குக் கூட்டத்தினர் மௌன அஞ்சலி செலுத்தி அனுதாபம் தெரிவித்தனர்.

தோழர் பழம் பி அவர்களின் ஒப்பற்றத் தொண்டினை நாட்டுக்கு எடுத்துக் கூறும் சோகத்துடன் அவரது மனைவி நாள் மனர் ஒன்று, 34-வது வட்டத் தோழர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

தோழர் பழம் பி அவர்களின் குடும்பத்திற்கு நிதி உதவ அந்த வட்டத் தோழர்கள் நிர்மாணம் வெளியாற்றி வருவதாகவும் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

அனுதாபம்

சென்னை, தொண்டையார் பேட்டை தி. மு. கழக உறுப்பினர் தோழர் துர். கோட்டிவன் அவர்களின் தமக்கை தோழியர் வளமல்லி, 14—9—54 அன்று உயிர் நீத்தமை குறித்துக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கோடிக்கரையில் கழக நிறுவனம்

இவ்வூரில், 23-9-54 பிற்பகல் 4-30 மணிக்கு தோழர் வ. சுந்தரத்தினம் அவர்கள் இல்லத்தில் தி. மு. கழக அலுவலகம் நடைபெற்றது. கல்யாணம், எம். டி. சுப்பிரமணியம் செயலாளராகவும், வி. வெங்கிட்டராமன் துணைச் செயலாளராகவும், கே. பி. சுப்பிரமணியம் பொருளாளராகவும், இன்னும் பல செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சக்கம்மாள்புரம் தி. மு. க. திறப்பு விழா

11—9—54 மாலை 4 மணிக்கு தோழர் பி. முத்துராமலிங்கம் தலைமையில் தி. மு. கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் தலைமை கொடியேற்ற விழா வாற்றினர். தோழர் மாகம், மற்றும் பலர் சொற்பொழி வாற்றியபின், நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மாகம்; துணைச் செயலாளர்: தலைமை; பொருளாளர்: பத்துதின்; மாவட்டப் பிரதிநிதிகள்: பி. முத்துராமலிங்கம், எம். எம். அப்துல்காதர் மற்றும் 25 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெங்களூர்-இலக்குமனபுரி தி. மு. க. ஆண்டு விழா

19—9—54 தான் 10 மணியளவில், கழக முதலாண்டு விழா தோழர் எம். இராமன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எல். பரசுராமன், மு. அரங்கசாமி, எம். வேட்டிவன் ஆகியோர் கழக வளர்ச்சி பற்றியும், கழக கடமை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

சர்க்கார் ஊழியர் 'பிறரிடம்' ஊதியம் பெறுகின்றனராம்!

பிரதிபலனை சர்க்கார் இராகசியங்களை வாணிபம் செய்கின்றனராம்!

மைசூர் சர்க்கார் ஊழியர் மீது முதன்மந்திரி தாக்குதல்

பெங்களூர், செப். 25—

"மைசூர் சர்க்கார் தலைமை அலுவலக ஊழியர்கள், குறிப்பிட்ட 'பிறருக்கு' சர்க்கார் இரகசியங்களை விலைக்கு விற்று வருகின்றனர்: அவர்கள், அப்பிறரிடம் ஊதியம் பெற்றும் வருகின்றனர்."

"சில சர்க்கார் இலாகா தலைவர்களும், ஊழியர்களும் அடிக்கடி அலுவலகத்தைவிட்டு வெளியே செல்லுகின்றனர். குறிப்பிட்ட காலத்தில் சிலர் அலுவலகத்திற்கு வருவது கிடையாது. வேறு சிலர், சர்க்கார் தகவல்களை, அலுவலகங்களில் அக்கறை கொண்டவர்களுக்கு விற்று விடுகின்றனர்."

—இவ்வாறு இரண்டு தினங்களுக்கு முன்பு இங்கு நடைபெற்ற சர்க்கார் தலைமை அலுவல ஊழியர் கூட்டத்தில் பேசிய, மைசூர் மாநில முதலமைச்சர் அலுமலத்தப்பா அறிவித்தார்.

இத்தகைய ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபட்டுள்ள சர்க்கார் ஊழியர்களை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றி விடலாமோவென்றும் எச்சரித்தார். எதிர்த்துக்கொள்ளும் கடுமையான நடவடிக்கை தீவிரமான தாக இருக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகர்ணோ விற்கு எதிர்ப்பு!

இரண்டாம் திருமணம்: பெண்களின் ஆட்சேபம்!

மக்கள்சபையில் விவாதம் நடத்த பெண் உறுப்பினர்கள் தீவிரம்!

இந்தோனேஷியக் குடியரசுத் தலைவர் சுகர்ணோ, தனது முதல் மனைவியான மத்மாவதி என்னவரையே 'குடியரசுத் தலைவரின் மனைவி'யாக வைத்துக் கொள்ளவேண்டுமென்று உறுதியளித்திருப்பதாக இந்தோனேஷிய பெண்கள் சங்கங்களின் குழு ஒன்று அறிவித்துள்ளது.

6 குழந்தைகளுக்கு தாயும், மூதல் மனைவியிருக்க மனைவிக்குப் பேற்றவரும், 30 வயது நிரம்பிய அழகியுமான திருமதி ஹர்தினி என்பவரை சுகர்ணோ தனது இரண்டாவது மனைவியாக ஏற்றுக் கொள்வதை, அந்தத் தாய்மார் சமூகங்கள் எதிர்த்தன.

மக்கள் சபையில் இதுபற்றி விவாதிக்கவுமான பெண் உறுப்பினர்களைத் தூண்டுவதாக மக்கள் சபையில் உள்ள பெண் உறுப்பினர்களில் ஒருவரும், இந்தோனேஷிய தாய்மார் சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான மேரியா உல்பா சந்தரசோ என்ற அம்மையார் அறிவித்துள்ளார்கள்.

குடியரசுத் தலைவர் சுகர்ணோ ஜூன் மாதத்தில் விவாகரத்து செய்து இரண்டாவது திருமணம் ஒன்றைச் செய்து கொள்ள உரிமை வாங்கியிருந்தார் என்பது மக்கள் சபையில் விவாதிக்கப்பட வேண்டும் என்று அந்த அம்மையார் குறிப்பிட்டார்.

சுகர்ணோவின் இரண்டாவது மனைவியார், மத்திய ஜாவாவில் உள்ள சொத்துக்களை எல்லாம் இடத்தில் உள்ள தனது சொந்த வீட்டை விட்டு, ஜகார்த்தாவிலிருந்து 40 மைல் தொலைவில் உள்ள போகோர் என்னும் இடத்தில் குடியரசுத் தலைவரின் மாளிகையருகில் உள்ள வீட்டில் குடியேறும் புறப்பட்டிலிட்டார் என்பதும் தெரிகிறது.

லாகூரில் பெருமழை

80 பேர் மரணம்?

லாகூர், செப் 24—

இன்று காலை லாகூரில் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 80 பேர் மரணமடைந்தார்கள் என்று நம்பப்படுகிறது.

லாகூர் நகரின் மழைய பகுதி வெள்ளத்தில் மூழ்கி பெரிய ஏரி போல் காணப்படுகிறது. நள்ளிரவில் மணி சோதனை 16 அங்குல மழை பெய்ததாகத் தெரிகிறது.

திருக்குறள் வகுப்பு

28—9—54 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, பெத்த நாய்க்கன்பேட்டை, எண். 15 முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். 'மக்கட் பேறு' குறித்து தோழர் மயிலை சிவமுத்து, தோழியர் மாமேனகை ஆகியோர் பேசுவர்.

ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு

உலக சமாதானத்திற்குப் பாடுபட, ஒருமித்த உணர்வு கொள்ள!

இந்தியா—இந்தோனேஷியப் பிரதமர்கள் தரும் கூட்டு யோசனை!

உலகிலுள்ள சுதந்திரமான நாடுகளிலெல்லாம் ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு ஒன்றை நடத்துவதற்கு இந்தியா, இந்தோனேஷியப் பிரதமர்கள் தங்களுடைய கூட்டறிக்கையில் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த மாநாட்டிற்கு செஞ்சீனாவும் அழைக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

கூட்டறிக்கையில் இடம் பெற்றுள்ள ஐந்தே அம்சங்களில் இந்தியா—இந்தோனேஷியா மாநாடு நடத்துவதே மிக முக்கியமானதாகக் கருதப்படுவதுடன் இருநாட்டு முதன்மந்திரிகளும் உலக சமாதானம் பற்றி மிக மிக முக்கிய கட்டமென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

டையூ 'விடுதலைப்படை' மீது தடியடிப் பிரயோகம்!

சௌராஷ்டிரா போலீசாரின் தாக்குதல்

பலருக்குக் காயம்; இருவர் கைது!

ராஜ்கோட், செப். 25—

டையூ விடுதலைப் படையினர் மீது சௌராஷ்டிரப் போலீசார், அவர்கள் போர்த்துகீசிய எல்லைக்குள் நுழையாது தடுப்பதற்காக தடியடிப் பிரயோகம் செய்து கலைக்க முயற்சித்ததாக செய்தி வெளியாகியுள்ளது.

டையு எல்லையில் உள்ள தமண்-மான்டீ கிராமத்தில் உள்ள சுங்கச் சோதனை அலுவலகத்திற்கு இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

டையு பிரதேசத்தைச் சேர்ந்த சில குழுக்கள் பிடியிலிருந்து விடுவிக்கும் எண்ணத்துடன் டையு விடுதலைக் குழுவைச் சேர்ந்த 50 தொண்டர்கள் அற்றல் எல்லைக்குள் கிராமங்களுக்குள் ஊர்வலமாகச் சென்று டையு எல்லைக்குள் நுழைய முயன்றனர். போலீசார் தடுத்து நிறுத்தி, எல்லையைக் கடக்கக் கூடாதெனக் கூறினராம்.

இதைப் பொருட்படுத்தாது, விடுதலைப் படையினர் போலீசாரை எதிர்த்துவிட்டு தந்திரங்களை எல்லாம் வகுத்து, சுமார் மணி நேரத்திற்குமதிகமாக, போலீசாரின் தடையை மீற முயற்சித்திருக்கின்றனர்.

ராணுவமான மக்கள் விடுதலைப் படைக்கு ஆதரவாகத் திரண்டு வந்ததால், நிலைமை தொடர்ந்து கட்டுக்கடங்காமல் போனதால், போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து, விடுதலைப் படையினரைக் கலைத்தனராம்.

காயமடைந்தவர்கள் டூலா எனுமிடத்தில் உள்ள சர்க்கார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கின்றனர்.

தோழர்கள் பிம்மன் காய், மோகன் கஜ்ஜார் சுக்ரா, டையு இருவரும், இந்த நிகழ்ச்சிகளுக்கு காரணமாக இருந்ததாகக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் தெரிகிறது.

ஜப்பானில் பூகம்பம்

60 பேர் மரணம்

டோக்கியோ, செப். 26—

இன்று காலை மேற்கு ஜப்பானில் வீசிய புயலினால் 60 பேர் மாண்டனர் என்றும், 70 பேரைக் காணவில்லை என்றும் 489 பேர் காயமுற்றனர் என்றும் தெரிகிறது.

புயலினால் ஏராளமான வீடுகள் சேதமாக்கப்பட்டதால், மாண்டோரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் என்று கூறுகின்றனர்.

புயலினால் ஏற்பட்ட கடல் அலைகளால் கோபி நகரம் மோசமான முறையில் பாதிக்கப்பட்டதாக என்று தெரிகிறது.

கிராம நலன்களை கவனிக்க விசேட அதிகாரிகள்

மூன்று மாவட்டங்களில் நியமிக்கப்படுவார்களாம்!

ஓட்டுப் பெற மந்திரி கூறும் ஆசை வார்த்தைகள்!

காஞ்சிபுரம்—

செங்கற்பட்டு, வட ஆர்காடு, தென் ஆர்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராம மக்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி, கல்வி, குழந்தை நல பாதுகாப்பு ஆகியவற்றைக் கவனித்துச் செயலாற்ற விசேட அதிகாரிகள் நியமிக்கப்படலாம் என ஜில்லா போர்டு தேர்தல் பிரச்சாரத்தில் சமூகநல மந்திரி மாமேனகை அவர்கள், பால் செட்டி சத்திரம் என்ற ஊரில் பிட்டார்.

காஞ்சிபுரத்தில் காங்கிரசை ஆதரித்துப் பிரச்சாரம் செய்த அவர் காங்கிரஸ்தான் அரசுக்கு நல்ல செய்திருக்கிறது என்று கூறி இப்பொழுது நாம்தப்பட்டவர்களின் மூவர் மாவட்ட 'கலெக்டர்களாகவும்' மூவர்கள் மாவட்ட போலீஸ் அதிகாரிகளாகவும் இருப்பதாகவும் தெரிவித்தார். அதனால் காங்கிரஸ் அபேட்சகர்களையே தேர்தலில் ஆதரிக்க வேண்டும் எனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

தென்மாவட்டங்களில் ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரசிற்கு வெற்றி கிடைத்தது போன்ற இந்த மாவட்டங்களிலும் வெற்றி கிடைத்தான்தான் இப்போது உள்ள மந்திரி சபையை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்பது தெரியும். எனவே இத்தேர்தலில் வெற்றி பெற காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு ஓட்டுத் தர வேண்டும் என்றும் அவர் கேட்டாராம்.

சட்டக் கல்லூரி மாணவர்கள்

இலங்கை சுற்றுப் பயணம்

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள், தோழர்கள் கு இராசாராம், பி சிவதாணுத்தன், துரைசாமி, காளியண்ணன் மற்றும் இருபத்தைந்து பேர்கள் கொண்ட மாணவர்கள் குழு சட்டக் கல்லூரி சமூக சேவைக் கழகத்தின் சார்பில் பேராதெனியா பொருட்காட்சி அவர்கள் தலைமையில் இலங்கையில் இரு வார சுற்றுப் பயணம் செய்ய 23—9—54ல் புறப்பட்டுச் சென்றனர். மாணவர்களை சட்டக் கல்லூரி கௌரவ லீவல் மைரெக்டரான தோழர் குன்றிராமன் சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் வழியனுப்பினார்.

இந்தியா—பிரிட்டன் வர்த்தகம்

பிரிட்டனுக்குத் தேவையான தேயிலையில் பெரும் பகுதி இந்தியாவிலிருந்தே அனுப்பப்படுகிறது. ஜூலையில் இந்தியா ஏற்றுமதி செய்த தேயிலை 1,27,388 அந்தர்-இதன் மதிப்பு 3,11,01,000 ரூபாய்கள்

ஜனவரி—ஜூலை முடிய பிரிட்டன் இந்தியாவுக்கு அனுப்பிய சாமான்களின் மதிப்பு 6,94,65,000 ரூபாய்கள், இந்தியாவிலிருந்து பிரிட்டன் கொள்முதல்செய்தமதிப்பு 7,43,21,000 ரூபாய்கள்.

முத்துக்கூத்தன்-மாகதம் பதிவு-கலப்புத் திருமணம்

பொதுச்செயலாளர் அண்ணாதுரை பாராட்டு

சென்னையில், தோழர் முத்துக்கூத்தன் (கடிதம்)—தோழியர் மாகதம் பதிவு கலப்புத் திருமணம், 24—9—54 காலை 10 மணி யளவுக்கு, திருமணம் பதிவாளர் முன்னர் கடைபெற்றதை பொட்டி, அன்று மாலை 6-30 மணிக்கு மயிலாப்பூர், தெற்கு மாடவீதி திருமண மண்டபத்தில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் பாராட்டு விழா நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள்ளம் ஜி இராமச்சந்திரன், வீரப்பா, க. அன்பழகன், டி. வி. ராமலிங்கம், வெகுளியன், ஈ வே. கி. சம்பத், சி. வி. இராசகோபால், கே. ஆர். இராமசாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டி வாழ்த்தினை வழங்கினர்.

மணமக்கட்கு கண்மணிகள் பலர் பரிசுகள் வழங்கினர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மணமக்களைப் பாராட்டி, வாழ்த்துரை வழங்குகையில் மணமக்கள் தம் வாழ்க்கையில் சமுதாய நலம் பல பெற்று, அறிவு வழி நின்று, நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் தொண்டு மூலம் மக்கள் அறிவுவளர்ச்சிக்கு மேலும் சிறந்த தம்பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பதிவு மணத்தின் மூலம் ஏற்படும் வாழ்வாங்கு வாழ்வின் விளக்கம் பின் தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"கலப்பு மணத்தின் மூலம் நாட்டில் சாதிவேற்றுமைகளைப் போக்க முடியும்; சமூகச் சிந்தனைகளைப் பற்றி எல்லோரும் பொதுமையாகப் பேசி முடிவும் செயலாற்றவேண்டிய சூழ்நிலைகளில், உறுதியாக நிற்க முடியாமல், தமது கொள்கைகளை மறந்து தவறான மட்டுமன்றி, தமது தவறுகளுக்கு வேறு காரணங்களையும் கூறி மறைவார்கள்; சமூகத்தினால் ஏதிர்க்கப்படும், பழமைமத்தும் மயக்க நிலைகளும், தோழர்கள். முன்னிருக்கும் இம் மணமக்கள் திருமணம் உறுதியுடன் கலப்பு—பதிவுத் திருமணம் செய்துகொண்டு, அதை வெளியிட்டு அறிவிக்கும் முறையில் பாராட்டு விழாக் கூட்டம் ஏற்பாடு செய்த பல தோழர்களுடைய பாராட்டுதலுக்கும், வாழ்த்துதலுக்கும் உரியவர்களாகுமாறும் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

மணமகன் தோழர் முத்துக்கூத்தன் அவர்கள், விழாவைச் சிறப்பிக்க வந்த அனைவருக்கும் கனிவுடன் மடல் ஒன்றை வரைந்து வழங்கினார்.

டாக்டர் ஜூலியன் ஹக்ஸ்லே தலைமையில் ஐ.நா. கல்வி, விஞ்ஞான, கலாச்சார ஸ்தாபனத்தின் அதிகாரிகள் குழு ஒன்று இந்தியாவுக்கு விஜயம் செய்கிறது. இக்குழு, இந்தியாவில் கல்வி, விஞ்ஞான, கலாச்சார நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கும். இக்குழு அக்டோபர் 5ந் தேதி டில்லி வந்து சேரும். இக்குழு டில்லி, ஜெய்ப்பூர், ஆக்ரா, பனாரஸ், கல்கத்தா, புனா, பம்பாய், ஹைதராபாத், பெங்களூர், மைசூர், மதராஸ் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்யும். இக்குழுவினர் அக்டோபர் 15ந் தேதி மதராஸ் வருவார்கள்.